முருகப்பெருமான் துணை

**மகான் இராமதேவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.05.2023**, செவ்வாய்கிழமை

1. ஞானயுகம் படைக்க வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானதரும உன் நெறிமுறை
தரணியெங்கும் பரவி நிற்க
2. நிற்கவே யுகமாற்றம் நிகழுமென
நிலமதனில் உன்பெருமை கூறி
உற்றதொரு அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சோபகிருது தகர்திங்கள்
3. திங்களிலே இருபானாற்திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் **26**ம் நாள், **09.05.2023**, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் இராமதேவர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில்படைத்து அருளும்
4. அருளும் அரங்க மகானின்
அருளுபதேச வழிகள் தன்னை
வரமாக மக்களெல்லாம் ஏற்று
வணங்கித் தொடர்ந்து வர
5. வருவதுடன் ஞானிகள் பூசை
வையகம் எங்கும் நடந்திட
குருவரங்கன் ஆசி பெற்றுமே
குறையிலா சேவையாக செயல்பட
6. செயல்பட வினைகள் இல்லா
சிறப்பான சக்திபலம் கூடி
தயவான மக்கள் படையை
தரணியெங்கும் படைக்கும் வண்ணம்
7. வண்ணமுடன் சேவை ஆற்றி
வையகம் அரங்கன் அவதார
எண்ணம்வழி மாற்றம் கண்டு
எல்லா வகையிலும் தேற்றம்

8. தேற்றம் உலகோர் கண்டு
தெரிவிப்பேன் ஞானவான்களாக
ஆற்றல்பட சிறந்து நிற்பர்
அரங்கன் தேடும் ஞானிகளாக
9. ஆகவே உலகோர் தேறி
அரங்கன் மார்க்கம் தன்னை
செகமெல்லாம் பரப்பி இனிதே
செப்பிடுவேன் யுகமாற்றம் தன்னை
10. தன்னையே படைத்து சிறப்பர்
தன்னார்வத் தொண்டர்களாகி
அண்ணல் அரங்கன் பேரிலே
அன்னதான கிளைகளை படைத்து
11. படைத்துமே தருமம் வளர்த்து
பழுதில்லா தரும லோகமாக்கி
சோடையிலா ஞானயும் படைப்பர்
செப்பிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—